DEPOSITION OF WITNESS.
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO. 2, SIVAKASI
Case No.  STC.490/2024
**Depositions of   PW  1**

| Name | **பெரியசாமி** | Caste | |
|---|---|---|---|
| Father's name | ஆண்டிச்சாமி | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 10th Day of November 2025

**10-11-2025**

(எதிரி ஆஜர் .)

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் புகார்தாரர் ஆவேன். நான் எனது முதல் விசாரணை சாட்சியத்தினை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள விவரங்கள் என்னால் சொல்லப்பட்டு தயார் செய்யப்பட்டது தான். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். எனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களை ம.சா.ஆ-1 முதல் ம.சா.ஆ-4 வரை குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1. 03-04-2024 ஆம் தேதியிட்ட எதிரி, புகார்தாரருக்கு கொடுத்த காசோலை (எண். 328900) அசல் **ம.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. 04-04-2024 ஆம் தேதியிட்ட மேற்படி காசோலை திருப்பப்பட்டதற்கான குறிப்பாணை அசல் **ம.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. 23-04-2024 ஆம் தேதியிட்ட புகார்தாரர் தரப்பில் எதிரிக்கு அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் **ம.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. எதிரிக்கு அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பினை எதிரி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக கணினி பதிவிறக்க நகல் (Postal Track consignment) **ம.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(**கற்றறிந்த வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது**).